**வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டம் மேலதிக நிதியளிப்பு – மாகாண கூறு - 2015**

வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டம் மேலதிக நிதியளிப்பு – மாகாண கூறின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2012 நவம்பர் 19 ஆந் திகதிய 2890–எஸ்ஆர்ஜ(எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் (iv) ஆம் உறுப்புரையின் 4.04 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டம் - மேலதிக நிதியளிப்பின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் வடக்கு மாகாண சபையின் மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் வடமத்திய மாகாண சபையின் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளதுடன் முன்னைய உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சும் தற்போதைய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளது. இலங்கையின் வடக்கு மாகாணத்தினுள் மற்றும் வட பிராந்தியத்திற்கும் தென் பிராந்தியத்திற்கும் இடையே வீதி இணைப்பினை முன்னேற்றுதல் செயற்திட்டத்தின் நோக்கமாகும். செயற்திட்டம் கொண்டிருப்பவையாவன:

**பகுதி பீ. புனரமைப்பு மற்றும் மீளமைப்பு**

வடக்கு மாகாணத்திலுள்ள மாகாண வீதிகளின் ஏறத்தாழ 50 கிலோமீற்றர்கள் புனரமைப்பு மற்றும் தெரிவு செய்யப்பட்ட பாலங்களின் புனரமைப்பு மற்றும்/ அல்லது மீளமைப்பு

**பகுதி சீ. புனரமைப்பு மற்றும் மீளமைப்பு**

வடமத்திய மாகாணத்திலுள்ள மாகாண வீதிகளின் ஏறத்தாழ 70 கிலோமீற்றர்கள் புனரமைப்பு மற்றும் தெரிவுசெய்யப்பட்ட பாலங்களின் புனரமைப்பு மற்றும்/ அல்லது மீளமைப்பு

செயற்திட்ட நிர்வாகக் கைநூலின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 4,377 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 33.67 மில்லினானதுடன் அதில் ரூபா 3,757 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 28.9 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2013 மே 31 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2018 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

1.3 **நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.4 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது
அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்ததா என்பதும்,

(உ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(எ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஏ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஐ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஓ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதிகளின் நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2015 ஆம் ஆண்டின் போது | | 2015 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடிபீ | 28.90 | 3,757 | 1,398 | 10.20 | 1,332 | 23.10 | 3,009.25 |
| இலங்கை அரசாங்கம் | 4.77 | 620 | 224 | 0.98 | 127 | 2.13 | 276.54 |
| | 33.67 | 4,377 | 1,622 | 11.18 | 1,459 | 25.23 | 3,285.79 |

## 3.2 பௌதீக முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் அமுலாக்கல் திட்டத்தின் பிரகாரம், செயற்திட்ட காலப்பகுதியின் போது 75.65 கிலோமீற்றர்கள் நீளமுடைய அநுராதபுர மாவட்டத்திலுள்ள 07 மாகாண வீதிகள், 24.11 கிலோமீற்றர்கள் நீளமுடைய கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 04 மாகாண வீதிகள் மற்றும் 24.49 கிலோமீற்றர்கள் நீளமுடைய முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 02 மாகாண வீதிகள் புனரமைக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. அவற்றில் அநுராதபுர மாவட்டத்திலுள்ள சகல மாகாண வீதிகளும், கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 02 மாகாண வீதிகளும், முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 01 மாகாண வீதியும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

(ஆ) முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 12.85 கிலோமீற்றர்கள் நீளமுடைய வற்றாப்பளை - கேப்பைபிளவு - புதுக்குடியிருப்பு வீதியின் புனரமைப்பு வேலைகளிற்கான ஒப்பந்தமானது செயற்திட்டத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 2½ வருடங்களின் பின்னர் 2015 நவம்பர் 26 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் 2016 மே 31 இல் உள்ளவாறு 12.5 சதவீத பௌதீக முன்னேற்றத்தை மாத்திரமே காட்டியிருந்தது. செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்த கிளிநொச்சி மாவட்டத்தின் அக்கராயன் குளத்திலுள்ள 02 பிரதான கால்வாய் வீதிகளின் புனரமைப்பு வேலைகள் 2016 மே 31 இல் உள்ளவாறு 45.5 சதவீத பௌதீக முன்னேற்றத்தை காட்டியிருந்தது.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 மார்ச் 02 இல் கணக்காய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட வேலைத்தள விஜயத்தின் போது கீழ்த்தள நிலைமையை ஆய்வுக்குட்படுத்தாமல் முறையற்ற மண் நிரப்புகை மற்றும் மட்டமிடல் போன்றவற்றின் விளைவால் நீர்த்தேக்க அணைகள் மேல் இயங்கும் அநுராதபுர மாவட்டத்திலுள்ள கிரிகொல்லாவ - ஹீரலுகம மற்றும் யகவேவ - மஹாகூன்கஸ்கட வீதிகளின் பல இடங்களில் மேற்பரப்புக்கள் மற்றும் வீதி

விளிம்புகளில் கடுமையான வெடிப்புக்களும் சேதங்களும் இருந்தமை வெளிப்பட்டது. முறையற்ற மட்டமிடல் காரணமாக வடக்கு மாகாணத்திலுள்ள கென்னடி வீதி மற்றும் கால்நடைப் பண்ணைக்கான அணுகு வீதி என்பவற்றின் விளிம்புகள் சேதமடைந்திருந்ததுடன் கழுவிச் செல்லப்பட்டிருந்தன என மேலும் அவதானிக்கப்பட்டது. மேலும் 2016 ஏப்ரல் 11 இல் மேற்கொள்ளப்பட்ட வேலைத்தள பரீட்சிப்பின் போது வடக்கு மாகாணத்திலுள்ள ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு – மதலன் வீதியின் புல் பதிக்கும் வேலைகளின் 50 சதவீதத்திற்கும் அதிகமானவை ஒப்பந்தகாரரின் முறையற்ற பராமரிப்பு காரணமாக அதன்மீது ரூபா 8.19 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் தவறியிருந்தமை வெளிப்பட்டது.

(ஆ) ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், மாகாண வீதி அதிகாரசபைகளுக்கு கையளிக்கப்பட்ட பின்னர் மேலும் 05 வருட காலத்திற்காக செயற்திட்டத்தின் கீழான புனரமைப்பு வேலைகள் உரிய ஒப்பந்தகாரரால் பராமரிக்கப்படுவதற்கு வேண்டப்படுகின்ற போதிலும் வீதிப் பராமரிப்பு வேலைகளை மேற்பார்வை செய்வதற்கும் அதன்மீது கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் நிர்ணயிக்கப்பட்ட முறையான நுட்பமுறையொன்று இருக்கவில்லை.

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2007 ஏப்ரல் 05 ஆம் திகதிய 33 ஆம் இலக்க சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக வடமத்திய மாகாணத்தின் மாகாண செயற்திட்ட முகாமைத்துவ அலகு வடமத்திய மாகாணத்திற்கான ஆளுநரின் அங்கீகாரத்துடன் 2014 ஆம் ஆண்டிலிருந்து வடமத்திய மாகாண சபையின் 03 அலுவலர்களை ஈடுபடுத்தியிருந்தது. மீளாய்வாண்டின் போது நிலையான பதவிகளின் மாதாந்த சம்பளத்தின் 1/6 இற்கான படிகள் ரூபா 305,908 கூட்டுத்தொகை அவர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) 13 மாகாண வீதிகளில் 10 மாகாண வீதிகளின் புனரமைப்பு வேலைகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிட்டத்தட்ட பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் மாகாண வீதி அதிகாரசபைகளிற்கு கையளிக்கப்பட்டிருந்தன. எனினும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2018 யூன் 30 வரை தொடரப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தினால் மேற்கொள்ளவேண்டிய செயற்பாடுகளை அமுல்படுத்தி மேற்கொள்வதற்கும் செயற்திட்டத்தின் மிகுதி காலத்தின் போது மாகாண செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் தொடர் செயற்பாடுகளின் நியமிக்கப்பட்ட நோக்கங்களை உருவாக்குவதற்கும் முறையான செயல்நடவடிக்கைத் திட்டம் இருக்கவில்லை.